ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1725/15 - 2011 සැප්තැම්බර් 29 වැනි බ්‍රහස්පතින්දා - 2011.09.29
1725/15 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 29 ஆந் திகதி வியாழக்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV (அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

**மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மேல் மாகாண அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகார சபை நியதிச் சட்டத்தின் கீழே அதிகாரத்தில் உள்ள விதிகள்**

*மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை நியதிச் சட்டத்தின் 14 அத்துடன் 11 (2) ஆம் பிரிவுகளின் கீழ் மேல் மாகாண மாகாண சபையின் போக்குவரத்து, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், கலை மற்றும் கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு, கிராமிய அபிவிருத்தி நடவடிக்கை அமைச்சராகிய எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்திற்கிணங்க பின்வரும் விதிகளை அமுல்படுத்துகின்றேன். இவ்விதிகள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் தினத்தில் இருந்து நடைமுறைக்கு வருதல் வேண்டும்.*

ஹேவாமாதறகே உபாலி கொடிகார,
போக்குவரத்து, விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகாரங்கள்,
கலைகள் மற்றும் கலாசார நடவடிக்கைகள், கூட்டுறவு
அபிவிருத்தி, உணவு வழங்கல்கள் மற்றும் பகிர்ந்தளிப்புகள்,
கிராமிய அபிவிருத்தி நடவடிக்கைகள் அமைச்சர்,
மேல் மாகாண மாகாண சபை.

போக்குவரத்து, விளையாட்டுக்கள் மற்றும் இளைஞர் விவகாரங்கள்,
கலைகள் மற்றும் கலாசார நடவடிக்கைகள், கூட்டுறவு அபிவிருத்தி,
உணவு வழங்கல்கள் மற்றும் பகிர்ந்தளிப்புகள், கிராமிய அபிவிருத்தி
நடவடிக்கைகள் அமைச்சு,
மேல் மாகாண மாகாண சபை,
இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2011, செத்தெம்பர் 27.

## மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, மேல் மாகாண அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகார சபை நியதிச் சட்டத்தின் கீழ் அதிகாரத்திற்கு வரும் பிரமாணங்கள்

மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை நியதிச் சட்டத்தின் 14 மற்றும் 11 (2) ஆம் பிரிவுகளின் கீழ் மேல் மாகாண மாகாண சபையின் போக்குவரத்து, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் விவகாரங்கள், கலைகள் மற்றும் கலாசார நடவடிக்கைகள், கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல்கள் மற்றும் பகிர்ந்தளிப்புகள், கிராம அபிவிருத்தி நடவடிக்கைகள் அமைச்சரினால் அமுல்படுத்தப்படும் பிரமாணங்கள்.

குறுந்தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.

1. இப்பிரமாணங்கள் மேல் மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் அழகிய கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை பிரமாணங்கள் என அழைக்கப்படுவதுடன், 2010, ஒற்றோபர் மாதம் 1 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரவேண்டும்.

கட்டுப்பாட்டு அதிகார சபையின் கூட்டத்தை கூட்டுதலும் நடாத்துதலும்.

2. (1) கட்டுப்பாட்டு அதிகார சபையின் எல்லா கூட்டங்களும் பணிப்பாளரினால் கூட்டப்பட வேண்டும்.

(2) கூட்டம் நடைபெற மூன்று நாட்களுக்கு முன்னர், அதிகாரசபையின் அங்கத்தவர்களுக்கு நிகழ்ச்சி நிரல் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்.

(3) இயலுமான ஒவ்வொரு வேளையிலும் அதிகாரசபையின் கூட்டங்கள் மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்கத்தில் நடாத்தப்பட வேண்டும்.

(4) அதிகார சபையின் வாக்கெடுப்பின்போது வாக்கு சமனாகுமிடத்து அதிகாரசபையின் தவிசாளருக்கு தீர்மான வாக்கொன்று இருக்க வேண்டும்.

(5) அங்கத்தவர்களின் வருகை தொடர்பாக ஆவணம் ஒன்றைப் பேணுவது தவிசாளரின் பொறுப்பொன்றாகும்.

பணிப்பாளரின் அதிகாரங்களும் காரியங்களும்.

3. பணிப்பாளரினால் பின்வரும் அதிகாரங்களைப் பயன்படுத்தி உரிய காரியங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் :-

(1) அதிகார சபையின் அதிகாரங்களையும், காரியங்களையும் மேற்கொள்ளத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல்.

(2) அதிகார சபை எடுக்கும் தீர்மானம் தொடர்பான கூட்ட அறிக்கைகளை ஒழுங்காக கோப்பில் பேணுதல்.

(3) அதிகார சபையினால் எடுக்கப்படும் முடிவுகளை நடைமுறைப்படுத்துதல், மீள்பார்வை செய்தல் மற்றும் அதிகார சபைக்கு பின்னர் அறிக்கைகளை வழங்குதல்.

(4) அதிகார சபை அங்கீகரிக்கும் கொள்கைக்கு இணங்க, மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்கத்திற்காக குறுங்கால, மத்தியகால மற்றும் நீண்டகால திட்டங்களைத் தயாரித்து, அதிகார சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்துதல்.

(5) மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்கத்தின் காரியங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்தம் வரவு செலவுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, அதிகார சபையின் அங்கீகாரத்தினைப் பெறல்.

(6) வருடாந்தம் மதிப்பிடப்பட்ட எல்லைகள் போதாதவிடத்து அதற்கு குறைநிரப்பு மதிப்பீட்டினைத் தயாரித்து அதிகார சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளல்.

(7) ஒவ்வொரு தவணை முடிவிலும் மூன்று மாதங்களுக்கான பெறுகை மற்றும் கொடுப்பனவு அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வறிக்கை தவணை முடிவடைந்து 30 நாட்களுக்குள் அதிகார சபைக்கு சமர்ப்பித்தல்.

(8) மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தின் வருடாந்த வருமானம் மற்றும் செலவு, சொத்து மற்றும் பொறுப்பு என்பவற்றை ஒழுங்கான முறையில் கணக்கு வைப்பதற்கு வழிசெய்தல் மற்றும் கட்டுப்பாட்டு அதிகார சபைக்கு அறிவித்தல்.

(9) உத்தியோகத்தர்களினதும் ஊழியர்களினதும் படி, சேவை நிபந்தனை மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் அதிகார சபை மற்றும் அமைச்சின் செயலாளரின் சிபாரிசுடன் மேல் மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(10) அதிகாரசபையின் எல்லாச் சொத்துக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், பொறுப்பு வகித்தல் மற்றும் இருப்புக்களை பதிவு செய்து பேணிச் செல்லுதல்.

(11) மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தின் சேவை மற்றும் வசதிகளுக்காக அறவிடப்படும் கட்டணத்தை அதிகார சபையின் அங்கீகாரத்துடன் தீர்மானித்தல்.

(12) மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தினை சேவை மற்றும் வசதிகளுக்காக ஒதுக்கிக் கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு முறைகளைத் தயாரித்து அதிகார சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தல்.

(13) எல்லாப்படிவங்கள், விண்ணப்பங்கள், சேவைக் கட்டணங்கள், கட்டணச் சலுகை வழங்குதல், முற்பணம் மற்றும் மொத்த நிதியின் மிகுதியை அறவிடல், தண்டப்பணத்தின் அளவை பணிப்பாளரினால் தயாரித்து அதிகாரசபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்துதல்.

(14) மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தின் சேவைகள் மற்றும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் ஏதாவது நபர் ஒருவரினால் அல்லது குழு ஒன்றினால் அல்லது தாபனம் ஒன்றினால் உரியகால எல்லையினுள் தாபனத்தினுள் கடைப்பிடிக்க வேண்டிய, ஏற்றுக்கொள்ள வேண்டிய மற்றும் தவிர்க்க வேண்டிய எல்லா நிபந்தனைகளையும் தயாரித்து, அதிகார சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைக்கு இடல்.

(15) மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தினுள் காட்டப்படும் நாடகக் காட்சி, சங்கீதக் கச்சேரி, பொழுதுபோக்கு நடவடிக்கை அல்லது வேறு காரியங்கள் தேசிய பாதுகாப்பிற்கு அல்லது தேசிய கலாசாரத்திற்கு பாதிப்பு ஒன்றை ஏற்படுத்தினால் அதை இடைநிறுத்த அல்லது இரத்துச் செய்ய நடடிவக்கை எடுத்தல் மற்றும் அது தொடர்பாக அதிகார சபைக்கு அறிவித்தல்.

(16) வெளிரீதியான ஆலோசனையாளர்களால் நடாத்தப்படும் பாடநெறிகள் தொடர்பான வரையறைகளைத் தீர்மானித்தல் மற்றும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக உறுதிப்படுத்துதல்.

(17) மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தினதும், அதன் சுற்றாடலினதும், அதாவது நிரந்தர தற்காலிக எல்லா பௌதீக வளங்கள் மற்றும் எல்லா அமைப்புக்களினதும் நீண்ட கால பாவனை மற்றும் சிறந்த நிர்வாகத்தை உறுதிப்படுத்தத் தேவையான பராமரிப்புத் தேவைகள் மற்றும் முறைகள் அத்துடன் அவற்றை மேற்கொள்ள வேண்டிய குறித்த கால எல்லையை இனங்காணுதல், உரிய நடைமுறை செயற்பாடு ஒன்றினை ஸ்தாபித்து, மிகவும் உன்னிப்பாகக் கவனித்தல்.

கட்டுப்பாட்டு அதிகாரசபையின் நிதி மற்றும் நிர்வாக விடய ஒழுங்குவிதிகள்.

4. (1) நிதி வருடம் நிறைவடைய ஒரு மாதத்திற்கு முன்னர் அடுத்த வருடத்திற்கு உரிய வரவு செலவு திட்ட மதிப்பீடு பணிப்பாளரினால் அதிகார சபைக்கு சமர்ப்பித்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டும்.

(2) அதிகார சபையின் இறுதிக் கணக்கு குறித்த வருடம் நிறைவடைந்து அடுத்த வருட மாச்சு மாதம் 31 ஆந் திகதிக்கு முன்னர் பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் நாயகத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

(3) இறுதிக் கணக்கு, தவிசாளர் மற்றும் பணிப்பாளர் ஆகிய இருவரினாலும் கையொப்பம் இடப்பட வேண்டும்.

(4) அதிகார சபையினால் அங்கீகரிக்கப்படும் அரச வங்கி ஒன்றில் அதிகார சபையின் நிதி, வங்கி கணக்கொன்றில் பேணப்பட வேண்டும்.

(5) அதிகார சபையின் பெறுகை மற்றும் கொடுப்பனவு ஒழுங்குவிதிகள் பணிப்பாளரினால் தயாரிக்கப்பட்டு, அதிகார சபையின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

(6) அதிகார சபையின் எல்லா கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகவும் பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தர் விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் ஆகுவதுடன், கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தரான தவிசாளர் மற்றும் பணிப்பாளர் பிரதான கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தருக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

(7) மேல் மாகாண அழகியற் கலையரங்கத்தினால் உழைக்கப்படும் வருமானம் மற்றும் செலவின் அடிப்படையில் அதிகார சபையினால் தீர்மானிக்கப்படும் தவிசாளரின் மாதாந்தப்படியை அமைச்சின் செயலாளரின் சிபாரிசுடன் மாகாண ஆளுநரின் அங்கீகாரத்தின் கீழ் செலுத்த இயலும்.

(8) அரசினால் அத்துடன் மேல் மாகாண சபையினால் வெளியிடப்படும் பெறுகை நடவடிக்கை வழிகாட்டல் கோவைகளுக்கு இணங்க அதிகாரசபை செயற்பட வேண்டும்.

(9) மேல் மாகாண சபைக்கு உரிய நிகழ்ச்சி திட்டங்களுக்காக அதிகார சபையினால் அறவிடப்படும் நிதியில் 50% அல்லது மொத்தச் செலவைக் கணக்கிட்டு, அந்த நிதியுடன் 25% ஐச் சேர்த்து கிடைக்கும் நிதி ஆகிய இரண்டில் கூடிய பெறுமதி உடைய நிதியின் மிகக் குறைந்த தொகையை விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரின் சிபாரிசின் கீழ் விசேட சலுகை ஒன்றாக வழங்க இயலும்.

(10) அதிகார சபைக்குரிய மாகாண கலாசார நிகழ்ச்சி திட்டங்களுக்காக அந்த நிகழ்ச்சித்திட்டத்தின், மொத்தச் செலவினைக் கணக்கிட்டு அந்த நிதியுடன் 15% சேர்த்துக் கிடைக்கும் நிதியை அமைச்சின் செயலாளரின் சிபாரின் கீழ் அந்த நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்கு சலுகை ஒன்றாக வழங்க முடியும்.

(11) அதிகார சபையினால் அதிகார சபையின் நிர்வாக ஒழுங்குவிதிகள் மற்றும் நிதி ஒழுங்குவிதிகளைத் தயாரிக்கும் வரை மேல் மாகாண சபையின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் தாபன கோவையின் ஏற்பாடுகள் அதிகாரமுடையனவாக வேண்டும்.

(12) பணிப்பாளர் தவிசாளரின் நிர்வாகத்திற்கு உட்படுவதுடன், ஏனைய எல்லா உத்தியோகத்தர்களும் பணிப்பாளரின் நிர்வாகத்திற்கு உட்படுகின்றனர்.

(13) அதிகார சபையின் பணியாட்டொகுதி முகாமைத்துவ சேவைத் திணைக்களம் அங்கீகரித்த ஊழியர்களின் எண்ணிக்கையினுள் ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்ற ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க, அதன் நியமனம், பதவி உயர்வு மற்றும் சேவையில் இருந்து அகற்றுதல் என்பன இடம்பெற வேண்டும்.

(14)விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் ஒழுக்காற்று உத்தியோகத்தர் ஆவார்.

கட்டுப்பாட்டு அதிகாரசபையின் நோக்கம், அதிகாரம், கடமைகள், பொறுப்புகளை மேற்கொள்ளல்.

5. (1) மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்கத்தின் மேம்பாட்டிற்காக அல்லது பயிற்சியாளர்களின் மேம்பாட்டிற்காக கட்டணத்தை அறவிட்டு அழகியற் பாடநெறிகளை நடாத்த இயலும்.

(2) வெளிவாரி விரிவுரையாளர்களுக்கு அழகியற் பாடநெறிகளைக் கற்பிப்பதற்காக இந்த இடத்தை குத்தகைக்கு அல்லது வாடக்கைக்கு விட இயலும்.

(3) மேல் மாகாணத்தின் அழகியற் கலையரங்க கட்டுப்பாட்டு அதிகாரசபை நியதிச் சட்டத்தின் நோக்கத்திற்கு இணங்கியதாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நிதியாகவோ அல்லது பொருளாகவோ கிடைக்கும் மானியம், அன்பளிப்பு, பரிசில்களை உரிய முறையில் கணக்கு வைத்தல் இருப்பு புத்தகங்களில் குறிப்பது இடம்பெற வேண்டும்.

(4) வெளிநாட்டு கச்சேரிகளைக் காண்பித்தல், பரிமாற்றிக் கொள்ளுதல், அழகியற் விடயத்திற்கு உரியதாக உள்நாட்டு, வெளிநாட்டு தாபனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள இயலும்.

10- 321

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.